புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# திருமுருகாற்றுப்படையில் முருகவழிபாடு

*திருமதி. ஜே. எஸ். ஊர்மிளா*
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த் துறை, சௌராஷ்ட்ர கல்லூரி (தன்னாட்சி) மதுரை -4.*

*முன்னுரை:-*

*“பிறப்பிற்கு முன் மனிதன் எங்கிருந்தான்? இறப்பிற்குப் பின் அவன் எங்கு இருப்பான்? உண்பதற்குக் காய், கனி, கிழங்குகளையும், உறைவதற்கு மலைக்குகைளையும், பருக நீரையும், அல்லும் பகலும் ஒளியையும் படைத்தது யார்? இவ்வினாக்களுக்குப் பண்டைய மனிதன் தேடிய விடைதான் கடவுள்“*[i]

*“ஆதிகாலத்தில் மனிதனுக்குக் கடவுள் பற்றிய எண்ணம் தோன்றக் காரணமாக இருந்தது அச்சமே ஆகும்”*[ii] *மனிதன் தொடக்ககாலத்தில் காடுகளிலும், குகைகளிலும் வாழ்ந்து வந்துள்ளான். இவ்வாறு வாழ்ந்து வருகின்றபோது அவன் எதைக்கண்டும் அச்சம் கொள்ளாமல் இருந்திருக்க வேண்டும். நிலம், நீர், தீ, காற்று, வான் என்ற ஐம் பூதங்களும் மனிதனுக்கு நன்மை செய்வனவாகவும், தீமை செய்வனவாகவும் திகழ்ந்தன. இயற்கை தரும் நன்மைகள் அவனை அன்பு செய்ய வைத்தன. அவை படுத்தும் அல்லல்கள் அச்சப்படுத்தின. அவனுக்கு ஏற்பட்ட அச்சஉணர்வின் காரணமாகக் கைகளைப் பிணைத்து மார்ப்புப் பகுதியில் வைத்து நடுங்கினான். இயற்கையின் சீற்றம் குறையத் தொடங்கியது. மனிதன்தன் கைகளை எடுத்து வணங்குவதால் (கைகளைப் பிணைத்து) தான் இயற்கையின் சீற்றம் குறைந்துள்ளது என நினைத்தான். அதன் விளைவு தான் வழிபாடு உணர்வுக்கு அடிப்படையானது.*

*இயற்கை வழிபாடு:-*

*இயற்கையுடன் இணைந்து வாழப் பழகிய மனிதன், இயற்கையையே வழிபடவும் செய்தான். ஐம்பூதங்களால் தான் அடைகின்ற நன்மைக்கு நன்றிக் கடன் செலுத்துவதற்காகவும், தீமையிலிருந்து தன்னை காத்துக் கொள்வதற்காகவும் இயற்கையை வழிபட்டான். வேதகால ஆரியர் இந்திரன், சூரியன், சந்திரன், வருணன், வாயு போன்ற சிறு தெய்வங்களையும், பஞ்ச பூதங்களையும் வணங்கினர் என்பதை வேதங்களே ஓதுகின்றன.*

*தொல்காப்பியர் கால வழிபாடு:-*

*தொல்காப்பியம், தமிழர் வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்துள்ளது. தொல்காப்பியர் காலத்தில் மனிதன் ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் ஒவ்வொரு தெய்வத்தைக் குறித்தான். இதைத் தொல்காப்பியர்*

*“மாயோன்மேயகாடுறைஉலகமும்*
*சேயோன்மேயமைவரைஉலகமும்*
*வேந்தன் மேயதீம்புனல்உலகமும்*
*வருணன் மேயபெருமணல்உலகமும்”*[iii]

*எனச்சுட்டுகிறார்.*

*சேயோன் - முருகன் கடல் சூழ் உலகில் முதலில் தோன்றிய நிலமாகியமலைக்கு, முதல் தெய்வமாகக் கொள்ளப்படுகிறன். பத்துப்பாட்டில் உள்ள நூல்களில் பல இடங்களில்*

அப்பெருமானின் தொன்மையும், முதன்மையும், தோற்றப்பொலிவும், வழிபாட்டு முறைகளும் காணப்படுகிறது.

முருகவழிபாடு:-

முருகன் வழிபாடு தமிழ்நாட்டில் தொன்றுதொட்டே நிகழ்ந்து வருகின்றது. முருகன் வடமொழியில் ஸ்கந்தன் என்றும், தமிழ் மொழியில் கந்தன், கடம்பன், விசாகன், கார்த்திகேயன், பாலமுருகன், சரவணபவன், ஆறுமுகன், சிவகுரு, குருமூர்த்தி, சேவல் கொடியோன், மயில்வாகணன், சுப்பிரமணியன், தண்டபாணி, வள்ளிமணாளன், மலைகிழவோன் என்றும் பல பெயர்களால் சிறப்பித்து அழைக்கப்படுகிறான். திருமுருகாற்றுப்படையில் இடம்பெறும் முருகவழிபாட்டைப்பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

ஆறுபடை வீடா?

திருமுருகாற்றுப்படை ஏட்டிலும், அச்சிலும் ஆறு தலைப்புக்களின் கீழ் ஆறு பகுதிகளாக அமையவே, தனித் தனி ஆறு இடங்களாகக் கருதி, ஆறுபடை வீடு என்ற வழக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். '..... படைவீடு என்பது இன்ன தென்று பத்துப்பாட்டில் ஒன்றாகிய மலைபடுகடாத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. சேயாற்றங்கரையில் நவிரமென்னும் மலையில் காரியுண்டிக் கடவுளின் கோயில் சேனைகளாற் சூழப்பட்டிருந்த தென்று சொல்லியிருத்தல் இக்கருத்தைப் புலப்படுத்தும், …… நன்னன் என்பான் அந்த ஸ்தலத்தைப் பாதுகாத்தற்குப் படைகளை அங்கே வைத்திருந்தான். சத்துருக்களாலும் அந்நிய மதத்தினராலும் நேரக் கூடிய இடையூறுகளைத் தவிர்த்தற்குச் சேனைகளை அங்கு வைத்திருந்தான் போலும்…" [iv]என்பர் டாக்டர் உ.வே.சா. இந்நோக்கத்துடன் பார்த்தால் முருகன் சூரனோடு போர்புரியப் படையோடு சென்று தங்கிய திருச்செந்தூர் ஒன்று மட்டுமே 'படைவீடு' என அழைத்தற்குரியதாகும்.

"திருமுருகாற்றுப்படையுள் குறிப்பிடப்பட்ட முருகன் திருப்பதிகளை ஆற்றுப்படை வீடு என்று குறித்தனர் போலும். பாசறையைக்குறிக்கும் படைவீடு என்னுஞ்சொல் முன்னரே வழக்காற்றில் இருந்தமையாலும், முருகன் படைத்தலைவன் (சேனாபதி) எனப் பெற்றமையாலும், ஆற்றுப்படை என்றதனையொட்டி ஆற்றுப்படை வீடு என்று நீட்டவாய்ப் பேறப்பட்டது முருகன், ஆறுமுகன் எனப்பெற்றமையாலும், அவனுக்குரிய திருமந்திரம் ஆறெழுத்து எனப்பட்டமையாலும், முருகனை வளர்த்தோர் ஆரல் (கார்த்திகை) மகளிர் அறுவர் எனப்பெற்றமையாலும், ஆறு என்னும் எண்ணுப் பெயர் முருகனோடு பல்லாற்றானும் தொடர்பு படுத்தப்பட்டமையின் ஆற்றுப்படை என்பதிலுள்ள ஆறு என்னும் இடப்பெயர், ஆறு என்னும் எண்ணுப் பெயராகக் கொள்ளப்பட்டது. முருகன் ஆறுபடை வீடுகளில் எழுந்தருளியிருக்கின்றான் என்றும், அவ்வாறுமே அவற்கு உகந்த திருப்பதிகளா மென்றும் பொதுமக்கள் கருதுவாராயினர்"[v] என்பர் புலவர் இறைக்குருவனார்

நூலமைப்பு:-

முந்நூற்றுப் பதினேழு அடிகளைக் கொண்டு நேரிசை ஆசிரியப் பாவால் இயற்றப்பட்டது திருமுருகாற்றுப்படை. முருகனை அறிமுகப்படுத்தி, அவன் எழுந்தருளும் இடங்களையும், வழிபாட்டு முறைகளையும் கூறி மக்களனைவரையும் முருகுநெறிப்படுத்த எழுந்ததே இந்நூல். பரங்குன்றம், அலைவாய், ஆவிநன்குடி மூன்றும் புராண வகையில் நூலளவாகக் கொண்டு புனைந்துரைத்த வழிபாடாகும். புனைந்துரையாவது இயற்கையான் நிலை பெறாது, புலவரான் இல்லது இனியது நல்லது என நாட்டப்பட்டதாம். ஏரகம் முதலிய பிற இடங்கள் (177-249) உலகில் மக்களின் நடைமுறை கண்டு காட்சியளவாகக் கூறிய வழிபாடாகும். நக்கீரர் தமது முடிவாக முருகனை கண்டு பரவும் முறையையும் விளக்கி, அவன் அருளுமாற்றையும், பெறலரும் பரிசில் நல்குவதையும் கூறி முடிக்கின்றார்.

சூரரமகளிர் வழிபாடு:-

"சூரர மகளிர் தம் திருமேனி அழகால் சிறந்து, அணிகலன்களால் மேலும் அழகோடு விளங்கி மலர்கள் புனைந்தமாட்சிக் கோலத்தில் பொலிவுற்று, மலைச் சாரல் சோலையிடத்தே விளையாடுகின்றனர். அவர்கள் அவ்வாறு விளையாடுங்கால் வஞ்சியாது எதிர் நின்று கொன்று நிற்கும் வெற்றியையுடைய முருகனை வாழ்க! என வாழ்த்துகின்றனர். அனைவரும் ஒருங்கே

கூறச்சீர்மை மிகுமலையிட மெல்லாம் கோழிக் கொடி நெடுங்காலம் வாழ்க! என்று வாழ்த்துவது பல இடங்களில் எதிரொலிக்குமாறு, முருகனை வாழ்த்தி, வணங்கிப்பாடுகின்றனர். இதனை

"கோழிய ஓங்கிய வென்றடுவிறற்கொடி
வாழியபெரிதென்றுஏத்திப்பலருடன்"

இப்பாடலடியால் அவர்கள் வழிபடுவதை அறியலாம்.

அந்தணர் வேள்வியும், வழிபடும் முறையும்:-

கடைச்சங்ககாலத்திற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டில் அந்தணர்கள் பலர் வாழ்ந்து வந்தனர். வேதம்கற்ற அந்தணர்கள்; வேள்வி; செய்தனர். முருகனுடைய ஆறு முகத்தில்; ஒரு முகம்

"மந்திர விதியின் மரபுளிவழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே;" (95-96)

இப்பாடலடியால் தமிழ்நாட்டிலே அந்தணர்கள் வேதமுறைப்படி வேள்விகளைச் செய்து முருகனை வழிபட்டு வந்தனர் என்பதை அறியலாம்.

வழிபடும் முறை:-

இருபிறப்பாளரின் இயல்பு
இரு மூன்று எய்தியஇயல்பினின்வழாஅதுஇ
இருவர்ச்சுட்டிய பல் வேறு தொல் குடிஇ
அறு நான்கு இரட்டி இளமை நல்லி யாண்டு
ஆறினின்கழிப்பியஇஅறன்நவில்கொள்கைஇ
மூன்று வகைக் குறித்த முத்தீச்செல்வத்துஇ
இருபிறப்பாளர்இ பொழுது அறிந்து நுவல
அந்தணர் வழிபடும் முறை
ஒன்பது கொண்ட மூன்று புரி நுண் ஞாண்இ
புலராக்காழகம் புலர உடீஇஇ
உச்சிக்கூப்பியகையினர்இதற்புகழ்ந்துஇ
ஆறு எழுத்து அடக்கியஅருமறைக் கேள்வி
நா இயல் மருங்கில்நவிலப்பாடிஇ
விரை உறு நறு மலர் ஏந்திப் பெரிது உவந்துஇ
ஏரகத்துஉறைதலும்உரியன்அதாஅன்றுஇ (177-189)

ஓதல் முதலிய அறுவகைத் தொழில்களைச் செய்தலிலே வழுவாமல், உலகத்தார் மதிக்கின்ற பல்வேறு பழங்குடிப் பிறப்பினராய், நாற்பத் தெட்டு வருடங்கள் நல்ல இளமை காலம் முழுவதும் வேதம் கூறும் வழியில் பிரமச்சரியத்தைக் கைக்கொண்டு கழித்தவர்களும் அதன்பின் இல்லற வாழ்க்கையில் பயின்ற கோட்பாட்டினை உடையவர்களும், சதுரம், முக்கோணம், வில்வடிவம் என மூன்று விதவடிவு உடையவனாகச் சொல்லப்பெற்ற குண்டத்தில் ஆகவனீயம், தட்சிணாக்கினி, காருகபத்தியம் என்ற மூவகைத் தீயால் உண்டாகிய செல்வத்தையும், இரு பிறப்பினையும் உடைய அந்தணர்கள், தாங்கள் வழிபட வேண்டிய முக்காலமும் அறிந்து, பூணூலையும், புலராதஆடையையும்அணிந்து கொண்டு, தலைமேலே குவித்த கையினராய் முருகப் பெருமானைப் புகழ்ந்து துதித்து, ஆறு எழுத்துக்களைத் தன்னிடத்தேக் கொண்ட, பெறுதற்கு அருமையால் "சரவணபவ" என்னும் வேத மந்திரத்தை நாக்கு மட்டும் அசையும் அளவில் பயிலும் படி பலமுறை ஒலித்துப் பின்னர் வாசமிக்க மலர்களைதூவி வழிபடவும் அதற்கு மிகவும் மகிழ்ந்து திருஏரகம் என்னும் தலத்தின் கண் அம் முருகப்பொருமான் எழுந்தருளி இருக்கிறார்.

வேலன் வெறியாட்டு:-

வெறி என்னும் பல பொருள் ஒரு சொல் இங்குத் தெய்வத்தைக் குறிக்கும்.[vi] முருகன் கோலம் புனைந்து, வேலேந்திய மகன் தன்மேல் முருகனை வருவித்துக் கொண்டு தெய்வமாக

ஆடுவான். அப்பொழுது மக்களுக்குக் குறை நீங்கவும் நலம் பெருகவும் ஆவண கூறுவான். அவன் கூறுவதை அனைவரும் தெய்வ மொழியாகக் கொள்வர்.

"வெறியறிசிறப்பின்வெவ்வாய் வேலன்
வேறியாட்டயர்ந்தகாந்தன்" (புறத். 5:1-2)

எனபர் தொல்காப்பியனார். எனவே வெறியாட்டு, "காந்தன்" எனவும் படும் என அறியலாம். 'காந்தன் சூடி ஆடுதலிற் காந்தள் என்றார்' என்பர் நச்சினார்க்கினியர்[vii]. வெறியாட்டு நிகழ்ச்சி, அகம்புறம் பற்றிய பழைய தமிழ் நூல்களிற் சிறப்பாகப் பயின்று வரக்காண்கின்றோம். எனினும் வெறியயர்களத்தை விரிவாக விளக்கியவர் நக்கீரரேயாவர்.

வழிபாடு நடத்தும் குறமகள் கோழிக் கொடியை உரிய இடத்தில் நாட்டுவாள். அதன் மீது நெய்யுடன் வெண் சிறு கடுகையும் அப்புவாள், தான் வழிபடுதற்குரிய மந்திரத்தைப் பிறர் கேட்கா வண்ணம் வாய்க்குள் கூறித்துதிப்பாள். தலைகுனிந்து வணங்கி மலர்களைத்தூவி வழிபடுவாள். பிறகு அவள் வெவ்வேறு நிறமுள்ள இரண்டு ஆடைகளை உள் ளொன்றும் புறமொன்றுமாக உடுத்துக் கொள்வாள். சிவப்பு நூலைத் தன் கையில் காப்பாகக் கட்டிக் கொள்வாள். இவ்வாறு கோலங்கொண்ட அவள். வெண்ணிறப் பொறியைத் தூவியபின், ஆட்டுக் கிடாயின் இரத்தங்கலந்த அரிசியைப் பலியாகக் கொடுப்பாள். மேலும் தானியம் நிறைந்த கூடைகளை எங்கும் வைப்பாள். மஞ்சள்; பொடியுடன் சந்தனத்தை எங்கும் தெளிப்பாள். செவ்வலரி மாலைகளை இணையொக்க அறுத்து, அவ்விடத்தில் அசையும் படித் தொங்கவிடுவாள். பிறகு அவள் மலையகத்து ஊரை வாழ்த்தி மணப்புகையிடுவாள். அப்பொழுது அனைவரும் குறிஞ்சிப்பண்ணைப்பாடி இசைக் கருவிகளை முழக்குவர். குறமகள் செந்நிறப் பூக்களைத்தூவி, இரத்தங்கலந்த தினையரிசியைப் பரப்பி வைத்து மேலும் முருகனுக்குரிய இசைக் கருவிகளை ஒலிக்கச் செய்வாள். தெய்வம் இல்லை என்பாரும் புறச் சமயத்தாரும் அஞ்சும் படியாக முருகக் கடவுளை அங்கு எழுந்தருளும்படி வேண்டிக் கொள்வாள். இவ்வாறு விழா நடத்தும் குறவர், ஆரவாரம் எழப் பாடியும், கொம்புகளை ஊதியும், மணிகளை ஒலித்தும், பிணிமுக யானையை வாழ்த்தியும் முருகனுக்கு வழிபாடு செய்வர். அவர்தம் வழிபாட்டை ஏற்றுக்கொண்டு அவர்கள் விரும்பிய வரங்களை விரும்பிய படியே முருகன் வழங்கியருளுவான்.

"சிறு தினை மலரொடுவிரைஇஇ மறி அறுத்துஇ
வாரணக்கொடியொடுவயிற் பட நிறீஇஇ
ஊர்ஊர் கொண்ட சீர் கெழுவிழவினும்இ" (218-220)

மிகுந்த வலிமை பொருந்திய பெரிய கால்களையுடைய கொழுத்த ஆட்டுக் கடயை வெட்டுவார்கள். அதன் குருதியுடன் தூய வெள்ளையான அரிசியைக் கலந்து பலிகளாகப் பண்ணுவார்கள். அவைகளைப் பிரப்பாங் கூடைகளிலே வைத்து முருகனைப்பூசிப்பார்கள்

"மத வலி நிலைஇயமாத் தாள் கொழு விடைக்
குருதியொடுவிரைஇய தூ வெள் அரிசி
சில்பலிச்செய்துஇ பல் பிரப்புஇரீஇஇ" (232-234)

இப்பாடலடிகள் உயிர்ப் பலியிட்டு முருகனைவழி பட்ட செய்தியைக் கூறுகின்றன. முருகனுக்குஆடுவெட்டிப் பூசை போடுதல் வழக்கமாக இருந்தது.

முடிவுரை:-

ஆதிகால மனிதனுக்கு அச்சத்தின் காரணமாகக் கடவுள் பற்றிய எண்ணம் தோன்றலாயிற்று. எனவே இயற்கையே அவன் கடவுளாக வழிபட்டான் எனலாம். ஐந்திணைப் பாகுபாட்டில் வாழ்க்கை முறையைப் பகுத்துக்கொண்ட சங்க கால மக்கள் ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் ஏற்புடைய தெய்வத்தை வணங்கலாயினர். அவரவர் தகுதிக்கும், பழக்கத்திற்கும் ஏற்ற முறையில் சூரரமகளிர், அந்தணர், குறமகள் ஆகியோர் முருகனை வழிபட்டனர் என்பது அறியப்படுகிறது. தன்னை வழிபடும் அடியார்களுடைய வழிபாட்டு முறையும், தகுதியும், வெவ்வேறாக இருப்பினும், அவரிடையே உள்ள வேறுபாட்டைகருதாது முருகன் மக்கள் அனைவர்க்கும் அருள்பாலிப்பதை திருமுருகாற்றுப்படையின் மூலம் அறியலாம்.

[i] க.ப. – அறவாணன், பாம்பு வழிபாடு திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு பக. 18
[ii] அ.ச.ஞானசம்பந்தன் - தத்துவமும், பக்தியும்பக்.2
[iii] தொல்காப்பியஅகத்திணையியல் - பொருளதிகாரம்நூற் - 5
[iv] சாமிநாதையர், டாக்கர். உ.வே., சங்கத்தமிழும்பிற்காலத்தமிழும், மு.கு., பக். 73-74
[v] இறைக்குருவனார், புலவர்., ஆற்றுப்படையும்ஆறுபடைவீடும் (கட்டுரை), செந்தமிழ்ச்செல்வி, மு.கு., பக்.581-582
[vi] கலைக் களஞ்சியம், தொகுதி 9, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1963 பக்.505
[vii] தொல். புறத். 5:1-2 நச்.உரை

********* ********* ********** ********* ********* ********** ********** **********